## பிரிவு – 4

## உள்ளாட்சி மன்றங்களின் நிதிகள் – வரி விதிப்பு மதிப்பீடுகளும் நிதி ஆதாரப் பற்றாக்குறையும்

**5.4.1.** இந்தப் பிரிவு 1993–94 ஆம் ஆண்டுடன் முடிவடையும் மூன்று ஆண்டுகளில் நிலவிய உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை படம் பிடித்துக் காட்ட முயன்றுள்ளது. மூன்று வகையான நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் அதாவது மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்கள் அதாவது ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின், 2002 ஆம் ஆண்டு வரையிலான வருவாய் வளர்ச்சி, செலவு பற்றிய மதிப்பீடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

வருவாய் நிலை:

**5.4.2.** நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் தனி நபர் வருவாய் பற்றி ஆய்வு செய்ததில், அவற்றுக்கிடையே பெரும் வேறுபாடுகள் இருப்பது தெரிய வருகிறது. நகராட்சிகளின் உயரளவு தனி நபர் ரூ.1629.41 ஆகவும் குறைந்தளவு வருமானம் ரூ.79.23 ஆகவும் இருந்தது. பேரூராட்சிகளின் நேர்வில், இவ்வேறுபாடு இன்னும் அதிகமாக உள்ளது. அதாவது உயரளவு தனி நபர் வருமானம் ரூ.3044.34 ஆகவும், குறைந்தளவு தனி நபர் வருமானம் ரூ.0.78 ஆகவும் உள்ளது.

**5.4.3.** பின்வரும் அட்டவணை அது பற்றிய விவரங்களை அளிக்கிறது.

அட்டவணை 5.20. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் தனி நபர் வருமானம்

| வருவாய் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|
| உயரளவு | 455.46 | 1,629.41 | 3,044.34 |
| குறைந்தளவு | 152.01 | 79.23 | 0.78 |
| மைய நிலை | 219.87 | 197.23 | 80.03 |
| சராசரி | 272.34 | 226.50 | 308.80 |
| வேறுபாடுகளின் சராசரி | 111.18 | 166.11 | 378.25 |

**5.4.4.** பேரூராட்சிகளின் நேர்வில், வேறுபாடுகள் மிக அதிகமாக உள்ளன. வேறுபாடுகளின் சராசரி 378.25 ஆகும். இது மைய நிலை அளவைப்போல் நான்கரை மடங்காகும். ஏனையவற்றில், மாநகராட்சிகளைக் காட்டிலும், நகராட்சிகளில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. பேரூராட்சிகளின் நேர்வில் குறைந்தளவு வேறுபாடு ரூ.0.78 ஆக உள்ளது. இந்த வேறுபாட்டளவு வியப்பும் அதிர்ச்சியும் அளிப்பதாக உள்ளது.

**5.4.5.** மொத்தமுள்ள உள்ளாட்சி மன்றங்களில் ரூ.100–ற்கும் குறைவாக தனி நபர் வருமானம் பெறுவனவற்றின் எண்ணிக்கை 430 ஆகும். இவற்றில் 5 நகராட்சிகளும் 425 பேரூராட்சிகளும் ஆகும்.

ஊரக உள்ளாட்சி மன்றங்கள்

5.4.6. ஊரக உள்ளாட்சி மன்றங்களில் தனிநபர் வருமானம் அவற்றின் பல்வேறு வகைப்பாடுகளுக்கிடையேயும் வேறுபாடு இருப்பதை உணர்த்துகிறது. அவற்றின் விவரம் வருமாறு:–

அட்டவணை 5.21. கணக்கிலான தனிநபர் வரவுகள்– ஊராட்சி ஒன்றியங்கள்

| அளவுகள்/வகைகள் | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 | வகை 6 |
|---|---|---|---|---|---|---|
| தனிநபர் வரவுகள்: வருவாய் | | | | | | |
| சராசரி | 119.07 | 95.52 | 99.53 | 88.14 | 96.83 | 83.71 |
| வேறுபாடுகளின் சராசரி | 72.21 | 39.23 | 35.15 | 37.73 | 77.93 | 38.04 |
| குறைந்தளவு | 56.80 | 35.54 | 49.56 | 18.91 | 32.86 | 18.44 |
| உயரளவு | 436.30 | 197.69 | 223.96 | 254.41 | 536.88 | 212.65 |
| வேறுபாட்டின் குணகம் | 60.64 | 41.07 | 35.32 | 42.81 | 80.48 | 45.44 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | | | | | | |
| சராசரிக்கும் அதற்கு மேற்பட்டவை | 12 | 14 | 29 | 47 | 13 | 28 |

குறிப்பு:– சராசரி, வேறுபாடுகளின் சராசரி, குறைந்த அளவு, உயரளவு ஆகியவற்றின் மதிப்பு ரூபாயில் கொடுக்கப்பட்டுள்ளது.

5.4.7. இதுபோலவே, ஊராட்சிகளிடையே வரவுகளில் காணப்படும் வேறுபாடுகளை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

அட்டவணை 5.22. மக்கள்தொகை அளவு

| மக்கள்தொகை | சராசரி | வேற்றுபாட்டின் சராசரி | குறைந்தளவு | உயரளவு | வேறுபாட்டு குணகம் | சராசரிக்கு மேற்பட்ட அல்லது சமமான ஊராட்சிகளின் எண்ணிக்கை | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1000 வரை | 53.88 | 58.99 | 0 | 926 | 109.49 | 431 | 1310 |
| 1001 – 2000 | 41.32 | 39.1 | 0 | 822 | 94.63 | 1645 | 4811 |
| 2001 – 3000 | 35.46 | 26.92 | 0 | 277 | 81.57 | 982 | 2818 |
| 3001 – 4000 | 32.21 | 25.74 | 0 | 200 | 79.94 | 570 | 1583 |
| 4001 – 5000 | 31.33 | 25.16 | 0 | 205 | 80.3 | 309 | 884 |
| 5000க்கு மேல் | 30.63 | 23.97 | 0 | 237 | 78.28 | 425 | 1177 |

குறிப்பு: சராசரி, வேறுபாட்டின் சராசரி, குறைந்தளவு, உயரளவு ஆகியவற்றின் மதிப்பு ரூபாயில் கொடுக்கப்பட்டுள்ளன.

மக்கள்தொகை, நிதி ஆதாரம், வரி செலுத்தும் திறன், வரி வசூல் முயற்சி ஆகிய வகைகளில் ஒன்றுக்கொன்று வேறுபாடு காணப்படுவதால் தனிநபர் வரி வருவாயில் பெரும் வேறுபாடு இருப்பதை

அட்டவணைகள் 5.20, 5.21, 5.22 உணர்த்துகின்றன. உயர் அடுக்குகளிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரங்களை மாற்றம் செய்யும் எந்தவொரு பொதுவான முறையும் உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயான வேறுபாடுகளைக் கருத்திற் கொண்டதாக இருக்க வேண்டும்.

**நிதிப் பற்றாக்குறை**

**5.4.8.** உள்ளாட்சி மன்றத்தின் நிதிப் பற்றாக்குறை என்பது நிதித் தேவைக்கும் கிடைக்கும் வருமானத்திற்குமிடையேயான இடைவெளி என்று விளக்கமளிக்கப்படுகிறது. நிதித்தேவை, தேவை அடிப்படையிலான (Normative Level) பணியை அளிப்பதற்கு ஆகும் செலவைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். எனவே, அளவு வகையில், சொல்வதானால் இப்பற்றாக்குறை உண்மையில் வழங்கப்படுகின்ற பணி அளவுக்கும், தேவை அடிப்படையிலான பணி அளவுக்குமிடையேவுள்ள இடைவெளியை நிரப்புவதற்காகும் செலவுக்கு சமமாகும். தேவை அடிப்படையிலான அளவையும் பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் மற்றும் நிதி ஆதாரங்களில் எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறையையும் கணக்கிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறைந்த அளவிலான தனி நபர் செலவு, நிதிப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கக்கூடும் என்பதைக் காட்டுகிறது.

**5.4.9.** மொத்த வருவாய், செலவு புள்ளி விவரங்களைக் கொண்டு, எதிர்பார்க்கப்படும் நிதிப் பற்றாக்குறை (Perceived Fiscal Gap) என்பதற்கு பின்வருமாறு பொருள் விளக்கம் அளிக்கலாம். (உண்மையில் பற்றாக்குறை மிக அதிகமாகவும் இருக்கலாம்)

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்படும் நிதிப் பற்றாக்குறை | – | மொத்தச் செலவு – மொத்த சொந்த வருவாய் |
| மொத்தச் செலவு | – | வருவாய்க் கணக்கிலான மொத்தசெலவு + மூலதனக்கணக்கிலான மொத்த செலவு (மத்திய அரசுத் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் சிறப்புத் திட்டங்கள் குறித்த செலவு நீங்கலாக) |
| மொத்த சொந்த வருவாய் | – | சொந்த வரி வருவாய்(ஒப்படை செய்யப்பட்ட + பகிர்ந்தளிக்கப்பட்டவரிகள் மற்றும் மானியங்கள் நீங்கலாக)+ வரி அல்லாத ஏனைய சொந்த வருவாய் |

**5.4.10.** மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றில் எதிர்பார்க்கப்படும் நிதிப் பற்றாக்குறைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 5.23.எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறை (ரூபாய் கோடியில்)

| உள்ளாட்சி மன்றம் | 1991 92 | 1992=93 | 1993–94 |
|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | |
| மாநகராட்சிகள் | –72.71 | –79.47 | –124.07 |
| நகராட்சிகள் | –62.03 | –64.57 | – 55.42 |
| பேரூராட்சிகள் | –16.72 | –13.98 | – 9.85 |
| மொத்தம் | –151.46 | –158.02 | –189.34 |
| **ஊரகப்பகுதி** | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | –54.87 | –53.65 | –53.66 |
| ஊராட்சிகள் | –24.90 | –8.04 | +7.77 |

குறிப்பு:– ஊரகப் பகுதி என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் அடங்கா)

**5.4.11.** அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் மொத்த நிதிப் பற்றாக்குறையையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், பற்றாக்குறை மிக அதிகமாக இருப்பதோடு மட்டுமின்றி பெருகிக் கொண்டேயும் வருகிறது என்பதை மேற்சொன்ன அட்டவணை நமக்கு உணர்த்துகிறது. 1993–94 இல், மொத்த நிதிப் பற்றாக்குறை அனைத்து நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களின் மொத்த சொந்த வரி வருவாய் மற்றும் வரி அல்லாத ஏனைய வருவாயில் 71 சதவீதமாகும். இப்பற்றாக்குறை, ஒப்படை செய்யப்படும் வரிகள், பகிர்ந்தளிக்கப்படும் வரிகள், வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகள் மீதான மானியங்கள், கடன்கள் ஆகியவை மூலமாக மாநில அரசு அளிக்கும் நிதிகளைக் கொண்டு ஓரளவுக்கு ஈடு செய்யப்படுகிறது.

**5.4.12.** நகர் மயமாக்கல் மற்றும் அதிகரித்து வரும் மக்கள்தொகை ஆகியவற்றின் தாக்கம்,(Influence) உள்ளாட்சி அரசின் வரவு – செலவுத் திட்டத்தில் மேலும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. இச்சூழ்நிலையில் தற்போதுள்ள நிதிப்பற்றாக்குறை மேலும் விரிவடையத்தான் செய்யும். இந்நூற்றாண்டின் எஞ்சிய கால அளவில், வளர்ந்துவரும் நாடுகளில், நகர்ப்பகுதி மக்கள் தொகையின் வளர்ச்சி வீதம் 3.5 சதவீதமாக இருக்கும் என்றும், இது ஊரக மக்கள்தொகையின் மதிப்பீட்டு வளர்ச்சியைப்போல் மூன்று மடங்காக இருக்கும் என்றும் உலக வங்கியின் ஓர் ஆய்வில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (பாகல் மற்றும் லின்1992)

**5.4.13.** தேவை மற்றும் செலவுக் காரணிகள் நகர்ப்பகுதி பணிகளுக்கான நகர்ப்புறங்களில் செய்யப்படுகின்ற மற்றும் செய்யப்பட்டிருக்க வேண்டிய பொது செலவினங்களை அதிகப்படுத்தும். உள்ளூர் அளவில் பொதுச் செலவு தேவைகள் நகர் மயமாக்கலின் அளவுக்கேற்ப தொகை அளவில் அதிகரிக்கிறது. தனி நபர் வகையிலும் இச்செலவு அதிகரிக்கக்கூடும்.

**5.4.14.** வருவாய்க் கணக்கைப் பொறுத்தவரை, மக்கள்தொகையிலும் தனி நபர் வருமான அளவிலும் காணப்படும் பெருக்கம், வருவாய்த்திறனை அதிகரிக்க வழி கோலுகிறது. ஆனால், உண்மையில் வருவாய் நிலை மேம்படும் வகையில், அதிகரிக்கும் வருவாய்த் திறனை போதுமான அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**5.5.15.** ஊரக உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியங்களின் நிதிப் பற்றாக்குறையை, ஈடுசெய்ய அவற்றுக்கு அதிக நிதி பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளூர் நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் மிகவும் குறைவாகவே உள்ளது. மாறாக, ஊராட்சிகளின் அதிக நிதிப் பகிர்வு, நிதி திரட்டுதல் ஆகியவற்றின் வாயிலாக நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

**எதிர்பார்க்கப்படும் வருவாய்ப் பற்றாக்குறை**

**5.4.16.** எதிர்பார்க்கப்படும் நிதிப் பற்றாக்குறையைப் போன்றே, வருவாய்ப் பற்றாக்குறைக்கும் நாம் விளக்கமளிக்கலாம். வரைமுறைகளின் அடிப்படையில் பராமரிப்புச் செலவு செய்யப்பட்டிருந்தால், ஏற்பட்டிருக்கக்கூடிய வருவாய்ப் பற்றாக்குறைக்கு மாறாக கணக்குப்படி தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறையே வருவாய்ப் பற்றாக்குறை எனக் குறிப்பிடப்படுகிறது. நிதிப் பற்றாக்குறையைப் போன்றே, எதிர்பார்க்கப்படும் வருவாய்ப் பற்றாக்குறையும் தனிப்பட்ட உள்ளாட்சி நிலைகளிலும் கணக்குப்படி பற்றாக்குறையை விட குறைவாக இருக்கக்கூடும்.

எதிர்பார்க்கப்படும் வருவாய்ப் பற்றாக்குறை – மொத்த வருவாய்க்கணக்கில் செலவு – எதிர்பார்க்கப்படும் மொத்த சொந்த வருவாய்

**அட்டவணை 5.24. வருவாய்ப் பற்றாக்குறை** (ரூபாய் கோடியில்)

| உள்ளாட்சி மன்றங்கள் | 1991–92 | 1992–93 | 1993–94 |
|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | |
| மாநகராட்சிகள் | –86.89 | –37.27 | –19.04 |
| நகராட்சிகள் | –39.23 | –42.81 | –31.48 |
| பேரூராட்சிகள் | –10.51 | – 6.22 | – 1.11 |
| மொத்தம் | –136.63 | –86.30 | –51.63 |
| **ஊரகப்பகுதி** | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | –39.98 | –38.50 | –35.17 |
| ஊராட்சிகள் | –24.90 | –8.04 | +7.77 |
| மொத்தம் | –64.88 | –46.54 | –27.40 |

குறிப்பு:– மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் குறித்த வரவு – செலவுப் புள்ளி விவரங்கள் இதில் அடங்கா. ( –) பற்றாக்குறையைக் குறிப்பிடுகிறது.

**5.4.17.** நிதிப் பற்றாக்குறைக்கு மாறாக, வருவாய்ப் பற்றாக்குறை அதிகமாக இருந்தாலும், குறைந்து கொண்டே வருகிறது. 1993–94 இல் மொத்த சொந்த வருவாயில், வருவாய்ப் பற்றாக்குறை, நகர்ப்பகுதிகளில் 18 சதவீதமாகக் இருந்தது. ஆனால் 1991–92 இல் இது 68.5 சதவீதமாக இருந்தது. இடைப்பட்ட இரு ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை கணிசமாகக் குறைந்திருப்பது சொந்த வருவாய் வசூல் அதிகரித்திருப்பதையே காட்டுகிறது. ஆனால், பற்றாக்குறை தொடர்ந்து ரூ.52 கோடி அளவிலேயே இருப்பது, உள்ளாட்சி மன்றங்களுக்கு அவற்றின் அடிப்படை வருவாய்ச் செலவுத் தேவையை நிறைவு செய்ய வருவாய்ப் பகிர்மானம் அவசியம் என்பதை உணர்த்துகிறது. ஊராட்சி ஒன்றியங்களில், நிதி ஆதாரங்கள் இல்லாததால் சொந்த நிதி திரட்டுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

**5.4.18.** கடந்த காலத்தில், வருவாய் வளர்ச்சி பின்வரும் மூன்று கூட்டு காரணங்களால் தடைபட்டுள்ளது.

(i) போதிய வரி விதிப்பு அதிகாரம் இல்லலாதது;

(ii) வரி விதிப்பு முயற்சிகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்படாதது;

(iii) குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை வரி வீதங்களை குறிப்பாக, சொத்து வரி வீதங்களைத் திருத்துவதற்கு அனுமதிக்காத மாநில அரசின் கட்டுப்பாடு.

இவையே உள்ளாட்சி மன்றங்களின் வருவாயில் தேக்க நிலை காணப்படுவதற்குக் காரணமாக அமைந்தன.

**5.4.19.** வருவாயில் தேக்க நிலை இருக்கும்போது, செலவு மட்டும் உண்மையிலும் கருத்தளவிலும் ஒரே சீராக அதிகரித்தே வந்துள்ளது. எடுத்துக்காட்டாக, வருவாய்ச் செலவில் முக்கியப் பங்கான ஊழியர் சம்பளம், மாநில விதிகளின்படி அகவிலைப்படி அளித்தல் மற்றும் ஏனைய ஊதிய உயர்வு காரணமாக ஒவ்வொராண்டும் சராசரியாக 25 சதவீதம் அதிகரித்து இருக்கிறது. இதுபோன்றே, பண வீக்கம், விலை உயர்வுக்கு வழி கோரியுள்ளது. ஆனால் வரிகள் மற்றும் வரியல்லாத ஏனைய வருவாய்கள், பணவீக்கத்திற்கு ஏற்றவாறு உயர்த்தும் முறையில்லாததால் செலவுக்கு நிகராக வருவாய் உயரவில்லை.

**5.4.20.** மாநில அரசு வழங்கும் உதவியும் போதுமானதாக இல்லலாதால், இதன் நேரடி விளைவாக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல பேரூராட்சிகள், தங்கள் பணியாளரமைப்புச் செலவையே செய்ய முடியாமல் திணறுகின்றன. சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய கட்டாயப் பணிகள் குறித்து செலவிடுவதற்கு மிகக் குறைந்த வருவாயே மிஞ்சுகிறது.

**5.4.21.** எனவே உள்ளாட்சி மன்றங்களின் பணி இரு விதமாகிறது.

1) பணி அளவை ஏற்றுக்கொள்ளத்தக்க வரையளவுக்கு உயர்த்துதல்

2) ஏற்றுக் கொள்ளத்தக்க வரையளவைத் (acceptable standards) தொடர்ந்து பராமரித்தலும் எதிர் காலத்தில் பெருகிவரும் மக்கள்தொகைத் தேவைக்கு ஏற்றவாறு அதனை உயர்த்துதலும்

**நிதிப்பற்றாக்குறைக்கு தீர்வு காணும் வழிகள்:**

**5.4.22.** நகர்ப்புற உள்ளாட்சிகளின் பற்றாக்குறை பிரச்சினைக்கு பின்வரும் நான்கு வெவ்வேறு வழிகளில், கொள்கையளவில் தீர்வு காணலாம்.

அ) உள்ளூர் வரி விதிப்பு முயற்சிகளை அதிகரித்தல்;
ஆ) உள்ளூர் வரி விதிப்பு அதிகாரத்தை அதிகரித்தல்;
இ) அரசின் உயர் நிலைகளிலிருந்து பெறப்படும் நிதிகளை அதிகரித்தல்;
ஈ) உள்ளூர் செலவுகளைக் குறைத்தல்

**5.4.23.** மேலே குறிப்பிடப்பட்ட நான்கு வழிகளில், உள்ளூர் வரி விதிப்பு முயற்சிகளை அதிகரிப்பதுதான் அதாவது, இனம் (a) தான் அதிகக் கவனம் செலுத்தத்தக்க வழியாகும். வரி ஆதாரங்களையும் வீதங்களையும் திருத்துதல், உள்ளூரில் அளிக்கப்படும் பணிகளுக்கான கட்டணங்களைத் திருத்துல், உள்ளூர் வரி விதிப்புக்கு வாய்ப்புள்ள புதிய வரிகளைக் கையாளுதல் ஆகியவற்றின் மூலம் நிதி நிலையை மேம்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது. இரண்டாவதாக, கடந்த காலங்களில், மாநில அரசுகள் தங்கள் வரி விதிப்பு அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத் தயங்கியதால், தற்போது மாநில வரிகளை அதிக அளவில் பகிர்ந்து கொள்வது பற்றி பரிசீலிக்க வேண்டும். அப்படியே வழங்கினாலும்கூட, மாநில ஒப்புமைச் சட்டங்களின் மூலம் (State Conformity Act) ஒப்படை செய்யப்பட்ட பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்களாக கூடுதல் நிதிகள் வழங்க வேண்டியிருக்கும். இதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

**5.4.24.** 1997–2002 ஆம் கால கட்டத்திற்குத் தேவையான வருவாய்களை உருவாக்குவது பற்றியும் நகர்ப்பகுதி மற்றும் ஊரகப்பகுதி உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த ஒவ்வொரு அடுக்குகளின் தேவைகள் பற்றியும் வரும் பத்திகளில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 1993–94 ஆம் ஆண்டு நிலவரப்படியான வரவு, செலவு நிலை, 1997–2002 ஆம் கால கட்டத்திற்கான வருவாய் – செலவு மதிப்பீடு ஆகியவை 5.25 முதல் 5.31 வரையிலான அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சொந்த வரிகள் வாயிலான வருவாய் ஆதாரங்களை உருவாக்குவது பற்றிய மதிப்பீடு அளிக்கப்பட்டுள்ளது. ஐந்தாண்டு கால அளவில் (1997–2002) முக்கியக் குடிமைப் பணிகளுக்குத் தேவை அடிப்படையில் ஆகும் இயக்க மற்றும் பராமரிப்புச் செலவு, ஏனைய விருப்புரிமைப் பணிகள், நிருவாகச் செலவு, கடன்பணிகள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் தொகை ஆகிய விவரங்களும் இந்த அட்டவணைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

அட்டவணை 5.25. 1993–94 (கணக்குகள்) (ரூபாய் கோடியில்)

| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு | | | | இயக்க பராமரிப்புச் செலவு | | | | | | | | (+) உபரி/ (–) பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சொந்த வரி | ஒப்படை வருவாய் | மானியம் வருவாய் | மொத்தம் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையன | மொத்தம் | |
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 171.86 | 113.62 | 7.85 | 293.33 | 36.13 | 37.35 | 46.56 | 19.28 | .. | 14.31 | 95.08 | 248.71 | 44.62 |
| நகராட்சிகள் | 111.63 | 39.19 | 6.33 | 157.15 | 27.62 | 14.36 | 26.69 | 18.16 | .. | 7.26 | 48.37 | 142.46 | 14.69 |
| பேரூராட்சிகள் | 57.22 | 26.81 | 2.20 | 86.23 | 16.43 | 4.70 | 9.90 | 16.82 | .. | 6.71 | 22.49 | 77.05 | 9.18 |
| மொத்தம் | 340.71 | 179.62 | 16.38 | 536.71 | 80.18 | 56.41 | 83.15 | 54.26 | .. | 28.28 | 165.94 | 468.22 | 68.49 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 43.50 | 9.10 | 71.58 | 124.18 | .. | .. | .. | 13.87 | .. | .. | 85.97 | 99.84 | 24.34 |
| ஊராட்சிகள் | 28.11 | 51.92 | 12.90 | 92.93 | 23.46 | 6.25 | .. | 9.34 | .. | 21.89 | 10.96 | 71.90 | 21.03 |
| மொத்தம் | 71.61 | 61.02 | 84.48 | 217.11 | 23.46 | 6.25 | .. | 23.21 | .. | 21.89 | 96.93 | 171.74 | 45.37 |
| பெருமொத்தம் | **412.32** | **240.64** | **100.86** | **753.82** | **103.64** | **62.66** | **83.15** | **77.47** | **..** | **50.17** | **262.87** | **639.96** | **113.86** |

**Table 5.26 1997-98**

(ரூபாய் கோடியில்)

| | | இயக்க பராமரிப்புச் செலவு | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு சொந்த வருவாய் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையவை | மொத்தம் | உபரி/ பற்றாக்குறை |
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 213.98 | 56.85 | 69.75 | 72.78 | 39.20 | 1.23 | 17.05 | 276.08 | 532.94 | 318.96 |
| நகராட்சிகள் | 145.31 | 35.28 | 26.28 | 65.11 | 40.68 | 1.90 | 14.10 | 178.39 | 361.74 | 216.43 |
| பேரூராட்சிகள் | 70.11 | 27.44 | 8.60 | 16.80 | 21.22 | 2.06 | 13.47 | 32.93 | 122.52 | 92.41 |
| மொத்தம் | 429.40 | 119.57 | 104.63 | 154.69 | 101.10 | 5.19 | 44.62 | 487.40 | 1017.20 | 587.80 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 56.70 | .. | .. | .. | 53.31 | .. | .. | 125.87 | 179.18 | 122.48 |
| ஊராட்சிகள் | 31.95 | 53.58 | 32.59 | 14.09 | 107.33 | 2.10 | 50.38 | 16.05 | 276.12 | 844.17 |
| மொத்தம் | 88.65 | 53.58 | 32.59 | 14.09 | 160.64 | 2.10 | 50.38 | 141.92 | 455.30 | 366.65 |
| **பெருமொத்தம்** | **518.05** | **173.15** | **137.22** | **168.78** | **261.74** | **7.29** | **95.00** | **629.32** | **1472.50** | **954.45** |

Table 5.27 1998-99

(ரூபாய் கோடியில்)

## இயக்க பராமரிப்புச் செலவு

| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு சொந்த வருவாய் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையவை | மொத்தம் | உபரி/ பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 234.63 | 62.53 | 76.72 | 80.06 | 43.12 | 1.35 | 18.75 | 303.70 | 586.23 | -351.60 |
| நகராட்சிகள் | 155.36 | 38.81 | 28.91 | 71.62 | 44.74 | 2.09 | 15.51 | 196.23 | 397.91 | -1242.55 |
| பேரூராட்சிகள் | 74.02 | 30.18 | 9.46 | 18.48 | 23.34 | 2.26 | 14.82 | 36.22 | 134.76 | -60.74 |
| மொத்தம் | 464.01 | 131.52 | 115.09 | 170.16 | 111.20 | 5.70 | 49.08 | 536.15 | 1118.90 | 654.89 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 58.66 | .. | .. | .. | 58.64 | .. | .. | 138.46 | 197.10 | 138.44 |
| ஊராட்சிகள் | 33.52 | 58.94 | 35.85 | 15.50 | 118.07 | 2.31 | 55.41 | 17.66 | 303.74 | -270.22 |
| மொத்தம் | 92.18 | 58.94 | 35.85 | 15.50 | 176.71 | 2.31 | 55.41 | 156.12 | 500.84 | -408.66 |
| **பெருமொத்தம்** | **556.19** | **190.46** | **150.94** | **185.66** | **287.91** | **8.01** | **104.49** | **692.27** | **1619.74** | **-1063.55** |

Table 5.28 1999-2000

(ரூபாய் கோடியில்)

இயக்க பராமரிப்புச் செலவு

| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு சொந்த வருவாய் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையவை | மொத்தம் | உபரி/ பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 294.97 | 68.78 | 84.39 | 88.06 | 47.44 | 1.48 | 20.63 | 334.07 | 644.85 | 349.88 |
| நகராட்சிகள் | 179.17 | 42.69 | 31.80 | 78.79 | 49.22 | 2.30 | 17.06 | 215.85 | 437.71 | 258.14 |
| பேரூராட்சிகள் | 85.84 | 33.20 | 10.41 | 20.33 | 25.68 | 2.49 | 16.30 | 39.84 | 148.25 | -62.41 |
| மொத்தம் | 559.98 | 144.67 | 126.60 | 187.18 | 122.34 | 6.27 | 53.99 | 589.76 | 1230.81 | -670.83 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 60.83 | .. | .. | .. | 64.51 | .. | .. | 152.31 | 216.82 | 155.99 |
| ஊராட்சிகள் | 35.16 | 64.83 | 39.04 | 17.05 | 129.87 | 2.54 | 60.95 | 19.43 | 333.71 | 298.55 |
| மொத்தம் | 95.99 | 64.83 | 39.04 | 17.05 | 194.38 | 2.54 | 60.95 | 171.74 | 550.53 | 454.54 |
| **பெருமொத்தம்** | **655.97** | **209.50** | **165.64** | **204.23** | **316.72** | **8.81** | **114.94** | **761.50** | **1781.34** | **-1125.37** |

Table 5.29 2000-01

(ரூபாய் கோடியில்)

## இயக்க பராமரிப்புச் செலவு

| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு சொந்த வருவாய் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையவை | மொத்தம் | உபரி/ பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 329.67 | 75.67 | 92.83 | 96.87 | 52.18 | 1.63 | 22.69 | 367.48 | 709.35 | 379.68 |
| நகராட்சிகள் | 201.25 | 46.96 | 34.98 | 86.66 | 54.14 | 2.53 | 18.77 | 237.44 | 481.48 | 280.23 |
| பேரூராட்சிகள் | 92.82 | 36.52 | 11.45 | 22.36 | 28.24 | 2.74 | 17.93 | 43.82 | 163.06 | 70.24 |
| மொத்தம் | 623.74 | 159.15 | 139.26 | 205.89 | 134.56 | 6.90 | 59.39 | 648.74 | 1353.89 | 730.15 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 61.21 | .. | .. | .. | 70.96 | .. | .. | 167.54 | 238.50 | 169.29 |
| ஊராட்சிகள் | 38.92 | 71.32 | 43.38 | 18.75 | 142.86 | 2.80 | 67.05 | 21.37 | 367.53 | -328.61 |
| மொத்தம் | 100.13 | 71.32 | 43.38 | 18.75 | 213.82 | 2.80 | 67.05 | 188.91 | 606.03 | -505.90 |
| **பெருமொத்தம்** | **723.87** | **230.47** | **182.64** | **224.64** | **348.38** | **9.70** | **126.44** | **837.65** | **1959.92** | **1236.05** |

Table 5.30 2001-02

(ரூபாய் கோடியில்)

## இயக்க பராமரிப்புச் செலவு

| உள்ளாட்சி மன்றம் | வருவாய்க் கணக்கில் வரவு சொந்த வருவாய் | குடிநீர் வழங்கல் | துப்புரவு | திடக்கழிவு | சாலைகள் | வெள்ள நீர்வடிகால் | விளக்கு வசதி | ஏனையவை | மொத்தம் | உபரி/ பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நகர்ப்பகுதி** | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 368.98 | 83.24 | 102.11 | 106.56 | 57.40 | 1.80 | 24.96 | 404.23 | 780.30 | 411.32 |
| நகராட்சிகள் | 218.95 | 51.65 | 38.48 | 95.33 | 59.56 | 2.78 | 20.65 | 261.38 | 529.83 | 310.88 |
| பேரூராட்சிகள் | 100.41 | 40.17 | 12.59 | 24.59 | 31.06 | 3.01 | 19.72 | 48.20 | 179.34 | 78.93 |
| மொத்தம் | 688.34 | 175.06 | 153.18 | 226.48 | 148.02 | 7.59 | 65.33 | 713.81 | 1489.47 | 811.13 |
| **ஊரகப்பகுதி** | | | | | | | | | | |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 65.83 | .. | .. | .. | 78.06 | .. | .. | 184.29 | 262.35 | 196.52 |
| ஊராட்சிகள் | 46.25 | 78.45 | 47.72 | 20.62 | 157.15 | 3.08 | 73.75 | 23.51 | 404.28 | 358.03 |
| மொத்தம் | 112.08 | 78.45 | 47.72 | 20.62 | 235.21 | 3.08 | 73.75 | 207.80 | 666.63 | 554.55 |
| **பெருமொத்தம்** | **800.42** | **253.51** | **200.90** | **247.10** | **383.23** | **10.67** | **139.08** | **921.61** | **2156.10** | **1355.68** |

அட்டவணை 5.31. 1993–94 நிலையிலும் 1997–98 உத்தேச நிலையிலும் முக்கிய திட்டங்கள் மற்றும் ஏனையவை குறித்த செலவைக் காட்டும் விவர அறிக்கை

| | குடிநீர் வழங்கல் | | துப்புரவு கழிவுநீரகற்றல் | | திடக்கழிவு நிருவாகம் | | சாலை | | வெள்ளநீர் வடிகால் | | விளக்குவசதி | | ஏனையவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 | 1993-94 | 1997-98 |
| நகர்ப்பகுதி | | | | | | | | | | | | | | | | |
| மாநகராட்சிகள் | 36.13 | 6.85 | 37.35 | 69.75 | 46.56 | 72.78 | 19.28 | 39.20 | .. | 1.23 | 14.31 | 17.05 | 95.08 | 276.08 | 248.71 | 532.94 |
| நகராட்சிகள் | 27.62 | 35.28 | 14.36 | 26.28 | 26.69 | 65.11 | 18.16 | 40.68 | .. | 1.90 | 7.26 | 14.10 | 48.37 | 178.39 | 142.46 | 361.74 |
| பேரூராட்சிகள் | 16.43 | 27.44 | 4.70 | 8.60 | 9.90 | 16.80 | 16.82 | 21.22 | .. | 2.06 | 6.71 | 13.47 | 22.49 | 32.93 | 77.05 | 122.52 |
| மொத்தம் | 80.18 | 119.57 | 56.41 | 104.63 | 83.15 | 154.69 | 54.26 | 101.10 | .. | 5.19 | 28.28 | 44.62 | 165.94 | 487.40 | 468.22 | 1017.20 |
| ஊரகப்பகுதி | | | | | | | | | | | | | | | | |
| ஊராட்சி | | | | | | | | | | | | | | | | |
| ஒன்றியங்கள் | .. | .. | .. | .. | .. | .. | 13.87 | 53.31 | .. | .. | .. | .. | 85.97 | 125.87 | 99.84 | 179.18 |
| ஊராட்சிகள் | 23.46 | 53.58 | 6.25 | 32.59 | .. | 14.09 | 9.34 | 107.33 | .. | 2.10 | 21.89 | 50.38 | 10.96 | 16.05 | 71.90 | 276.12 |
| மொத்தம் | 23.46 | 53.58 | 6.25 | 32.59 | .. | 14.09 | 23.21 | 160.64 | .. | 2.10 | 21.89 | 50.38 | 96.93 | 141.92 | 171.74 | 455.30 |
| பெருமொத்தம் | 103.64 | 173.15 | 62.66 | 137.22 | 83.15 | 168.78 | 77.47 | 261.74 | .. | 7.29 | 50.17 | 95.00 | 262.87 | 629.32 | 639.96 | 1472.50 |

@ Figure excludes Chennai Municipal Corporation
* Figure includes Chennai Municipal Corporation

**5.4.25.** வரி மற்றும் வரியல்லாத ஏனைய வருவாய், புது வரி விதிப்பு வாய்ப்பு, மாநில வரிகளிலிருந்து கூடுதல் பங்கீடு ஆகிய வழிகளில், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் பற்றி இந்த அறிக்கையின் 2 ஆம் பாகத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, பகுதி 3 இல் பின்வரும் பொருட்கள் பற்றிய பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

(i) முக்கியக் குடிமைப் பணிகளைப் பொறுத்தவரை, குறைந்தளவு முக்கியப் பணிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம்;

(ii) அந்த அளவுப்பணியை செய்து முடிப்பதற்கு தேவையான மூலதன நிதி ஆதாரங்கள்;

(iii) இந்த முக்கியக் குடிமைப் பணிகளைப் பொறுத்தவரை, தற்போது அளிக்கப்படும் பணிகளை தேவை அளவின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு ஆகும் செலவுக்கான நிதி ஆதாரங்கள்;

(iv) பணி அளவை மேம்படுத்துவதற்கு, அளிக்கப்பட வேண்டிய கூடுதல் பணிகள் வகையில் ஆகும் கூடுதல் இயக்கம் மற்றும் பராமரிப்புச் செலவு.

நிதிப் பற்றாக்குறையை நிறைவு செய்வதற்கான உத்தி பற்றி பின்வரும் பிரிவுகளில் விவாதிக்கப்பட்டுள்ளது.